# "கலந்தாய்வு" என்ற வார்த்தைக்கு இரண்டு வெவ்வேறு அர்த்தங்கள்

▪ அருண் ஜேட்லி

2013, ஜனவரி 11-ஆம் தேதி அன்று உச்ச நீதிமன்றம் கர்நாடகா ? ? லோகயுக்தா வழக்கில் தீர்ப்பு அளித்துள்ளது. 2013, ஜனவரி 3ஆம் தேதியன்று, குஜராதில் லோகயுத்தா நியமன? விஷயத்தில், 2013, ஜனவரி 2ஆம் தேதி உச்ச நீதிமன்றம் அளித்த தீர்ப்பு குறித்து, விவரமாக கருத்து வெளியிட்டிருந்தேன். ஒன்பது நாட்கள் இடைவெளியில் உச்ச நீதிமன்றம் அளித்திருந்த இரண்டு தீர்ப்புகளின் விவரங்கள் நான் மீண்டும் மீண்டும் படித்தேன். இந்த இரண்டு வழக்குகளின் தீர்ப்புகள் எந்தச் சட்டங்களின் கீழ் வழங்கப்பட்டனவோ அவை முற்றிலும் வெவ்வேறானவை; குஜரான் லோகயுக்தா நியமன வழக்கில் தலைமை நீதிபதி வெளியிட்ட கருத்து, ?? முக்கியமான சந்தேகங்கங்களை கிளப்பியுள்ளது.

<u>ஒதுக்கீடுகள்</u>

கர்நாடகா சட்டப் பிரிவு 3 லோகயுக்தா மற்றும் ? ? லோகயுக்தாவின் நியமனங்கள் குறித்து கூறுகிறது. மேற்குறிப்பிடப்பட்ட சட்டத்தின் பிரிவு 3(2), (b), கீழ்கண்டவாறு கூறுகிறது : -

"(b) உயர்நீதி மன்ற நீதிபதி பதவி வகித்தவராக இருக்க வேண்டும். அவர், கர்நாடக உயர் நீதிமன்றத்தின் தலைமை நீதிபதியின் ஆலோசனையுடன் சட்டமன்ற ஆலோசனைக் குழுத் தலைவர், கர்நாடக சட்டசபை சபாநாயகர், கர்நாடக சட்டசபை ஆலோசனைக் குழுவின் எதிர்கட்சித் தலைவர், கர்நாடக சட்டசபை எதிர்கட்சித் தலைவர் ஆகியோரின் ஒப்புதலுடன் முதலமைச்சரின் பரிந்துரைப்படி நியமிக்கப்பட வேண்டும்."

குஜராத் சட்டப் பிரிவு 3 பின்வருமாறு கூறுகிறது:

"இந்தச் சட்டத்தின் ஒதுக்கீடுகளைக் குறித்த விசாரணை நோக்கங்களுக்கு லோகயுக்தா என்று அறியப்படும் நபருடைய முத்திரை மற்றும் வாரண்ட் அளிக்கப்படவேண்டும்.

மேலும், உயர் நீதிமன்றத்தின் தலைமை நீதிபதியின் ஆலோசனைக்குப் பிறகுதான் லோகயுக்தா நியமிக்கப்பட வேண்டும். இப்படிப்பட்ட நியனமன் குஜராத் மாநிலத்தின் சட்ட சபை கலைக்கப்பட்டுவிட்ட சந்தர்ப்பத்தில் அல்லது அரசியல் அமைப்புச் சட்டத்தின் 356ஆவது சட்டம் குஜராத்தில் பிரகடனம் செய்யப்பட்டுள்ள சந்தர்ப்பத்தில், குஜராத் சட்டமன்ற எதிர்கட்டித் தலைவருடன் ஆலோசனை செய்யப்பட்ட பிறகுதான் இவருக்கு பதிலாக ஒரு நபர் சபாநாயகரின் அறிவுறுத்தலின்படி எதிர்கட்சி உறுப்பினர்களால் தேர்ந்தெடுக்கப்படுவார்."

வேண்டும் என்றால், அவர், உயர் நீதி மன்றத்தின் நீதிபதியாக பதவி வகித்திருக்க வேண்டும், மேலும் முதலமைச்சர் இவரை ஆளுநருக்குப் பரிந்துரை ஆலோசனை வழங்க வேண்டும். இந்த ஆலோசனை வழங்கப்படுவதற்கு முன், முதலமைச்சர், உயர் நீதிமன்றத்தின் தலைமை நீதிபதி, கர்நாடக சட்டசபை கவுன்சிலின் தலைவர், சட்டசபையின் சபாநாயகர், கர்நாடக சட்ட சபை கவுன்சிலின் எதிர்கட்சித் தலைவர், கர்நாடக சட்ட சபையின் எதிர்கட்சித் தலைவர் ஆகியோரை கலந்தாலோசிக்க வேண்டும். இந்தப் பிரிவில் பயன்படுத்தப்பட்ட முக்கிய வார்த்தை, 'கலந்தாலோசித்தல்".

குஜராத் சட்டத்தில் இடம்பெற்ற ? திமுறைகளின்படி, ஆளுநரின் முத்திரையுடன் இந்த நியமனம் செய்யப்பட வேண்டும். உச்ச நீதி மன்றம் குறிப்பிட்டுள்ளபடி ஆளுநர், அமைச்சரவையின் ஆலோசனை மற்றும் உதவியுடன் செயல்படுவார். முதலமைச்சர்/அமைச்சரவைக் குழு உயர் நீதி மன்றத்தின் தலைமை நீதிபதி மற்றும் எதிர்கட்சித்தலைவரைக் கலந்தாலோசிப்பார்கள். குஜராத் சட்டத்தின்படியும் பயன்படுத்தப்படும் முக்கிய வார்த்தை, 'கலந்தாய்வு" என்பதுதான்.

இதில் கவனிக்கப்பட வேண்டிய முக்கிய விஷயம், கர்நாடக சட்டத்தில் பயன்படுத்தப்பட்ட "கலந்தாய்வு" என்ற அதே வார்த்தைதான் குஜராத் சட்டத்திலும் உள்ளது. கர்நாடகா வழக்கில் அளிக்கப்பட்ட தீர்ப்பு, நிர்வாகம் மற்றும் நீதித்துறை இடையே சமநிலையையை நிலை நாட்டும் வண்ணம் உள்ளது. இது தங்க விதிகளின் தெளிவான விளக்கம், அதாவது, சட்டத்தில் கூறப்பட்டுள்ள விளக்கத்தை வெளிப்படுத்துகிறது.

<u>கர்நாடக பார்வை</u>

கர்நாடகா வழக்கில் உச்ச நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பில் கலந்தாய்வு அர்த்தமுள்ளதாகவும், உண்மையானதாகவும் இருக்க வேண்டும் என்று கருத்து தெரிவித்துள்ளது. முதலமைச்சர் ஆளுநரிடம் பரிந்துரைக்க விரும்பும் நபரின் பெயர், அனைத்து ஆலோசிக்கப்பட வேண்டியவர்களிடமும் தெரிவிக்கப்பட வேண்டும்.

கர்நாடகா வழக்கில் உச்ச நீதிமன்றம் அடுத்தடுத்து வெளிவிட்டிருந்த இரண்டு கருத்துகள் பின்வரும் அடிப்படையில் இருந்தன :-

"உயர் நீதி மன்றத்தின் தலைமை நீதிபதி உட்பட வேறு எந்த கலந்தாய்வு செய்யப்பட வேண்டியவர்களின் ஆலோசனையைவிட முதலமைச்சர் பரிந்துரை செய்த ஆலோசனைதான் முக்கியமாக கருதப்படும். …………… ……………………… ………………..

இந்த சட்டப் பிரிவு 3(2)(?) மற்றும் (b) எவ்வளவு கவனித்துப் பார்த்தாலும், பிரிவு 3(2)(a)மற்றும் (b)யில் பயன்படுத்தப்பட்ட வார்த்தைகள் கர்நாடக உயர் நிதிமன்றத்தின் தலைமை நிதிபதியின் கருத்து முக்கியமாகக் கருதப்பட வேண்டும் என்று கூறவே இல்லை என்பது என் கருத்து. எனவே, நான், பல்வேறு உயர் நீதிமன்ற வழக்குகளில் உயர் நிதிமன்றம் அளிக்கும் வழிகாட்டுதல்களில் தலைமை நிதிபதியின் கருத்து, முக்கியமானது என்ற கண்ணோட்டம், சட்டத்திற்கு அப்பாற்பட்டது என்பதுடன், சட்டத்தால் அனுமதிக்கப்படாத சட்ட உருவாக்கத்தில் உயர்நீதி மன்றம் ஈடுபட்டுள்ளது என்று கருதுகிறேன்.

………………………….. ………………………….. ……………………

எனினும் நான், முதலமைச்சர் பரிந்துரைத்த பெயர் உட்பட, கலந்தாலோசனை செய்யப்ப? வேண்டியவர்கள் பரிந்துரைத்த பெயர்கள் முறையாக கலந்தாலோசனை செய்யப்பட்ட பின், ஆலோசிக்கப்பட வேண்டியவர்களில் யாராவது வெளிப்படுத்தும் கருத்துகள் அவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்தவை அல்ல என்பதைத் தெளிவுபடுத்த விரும்புகிறேன். இந்தச் சட்டத்தின்படி ? ? லோகயுக்தா நியமனத்திற்காக கலந்தாலோசிக்கப்பட்ட பெயர்களிலிருந்து யாரை வேண்டுமானாலும் முதலமைச்சர், ஆளுநருக்குப் பரிந்துரைக்கலாம்."

இதைப் போலவே உச்ச நீதிமன்றத்தின் அடுத்த இரண்டாவது கருத்து பின் வருமாறு :-

"சாதாரணமாக முதலமைச்சர்தான் கவர்னருக்கு இது குறித்து, ஆலோசனை வழங்க வேண்டும். ஒரு வகையில் பார்த்தால், இந்த நியமனம் இவருடைய முக்கிய பொறுப்புகளில் ஒன்று. …………. ……………… ? ? லோகயுக்தா நியமனம் உருவாக்கம் ?? அரசியல் அமைப்பு அதிகாரங்களை கலந்தாலோசிக்கும் நடைமுறையை உள்ளடக்கியது. இந்தச் சட்டத்தின்படி ஒரு அரசியல் அமைப்பு அதிகாரம் ஒன்றுக்கொன்று குறைவானதோ உயர்வானதோ அல்ல. ………… ……….. இந்தச் சட்டத்தின் கீழ் ? ? லோகயுக்தா நியமனத்திற்காக முதலமைச்சரிடமிருந்து பெறப்பட்ட பரிந்துரைதான் கருத்தில் கொள்ளப்பட வேண்டும் …………. சட்டப் பிரிவு 3(2) (b) வின்படி ? ? லோகயுக்தா நியமன விஷயத்தில் முக்கிய பொறுப்பு முதலமைச்சருக்குத்தான் உள்ளது என்றும் அவர்தான் ஆளுநருக்கு இதைப் பரிந்துரைக்க வேண்டும் என்று கூறப்பட்டுள்ளது. இந்த நியமனத்திற்கான பெயரை, ஆளுநருக்கு பரிந்துரை செய்வதற்கு முன் ஆலோசிக்கப்படவேண்டிய அரசியல் அமைப்புச் சட்டத்தின் அதிகாரி உயர் நீதி மன்றத்தின் தலைமை நீதிபதி மட்டும்தான் என்றில்லை என்பதால், இவ்வாறு ஆலோசிக்கப்பட வேண்டிய மற்ற அரசியல் அமைப்பு சட்டத்தின் அதிகாரிகளைவிட இவரது கருத்து, முக்கியத்துவம் வாய்ந்தது என்று சொல்ல முடியாது. ……………."

கர்நாடக வழக்கில் உச்ச நீதி மன்றத்தின் தீர்ப்பில் தலைமை நீதிபதி உட்பட பல்வேறு

கலந்தாலோசிக்கப்பட வேண்டியவர்களிடம் அர்த்தமுள்ள ஆலோசனை நடத்தப்பட வேண்டும்

என்று கூறியுள்ளது. இதன்படி முதலமைச்சருக்குத்தான் முக்கியத்துவம் அளிக்கப்பட்டுள்ளது, உயர் நிதி மன்றத்தின் தலைமை நீதிபதிக்கு அல்ல.

குஜராத் பார்வை

குஜராத் லோகயுக்தா வழக்கில் உச்ச நீதி மன்றத்தின் கருத்து முழுக்க முழுக்க வேறுபட்டுள்ளது. உச்ச நீதிமன்றம், -- "தலைமை நீதிபதி சுதந்தரமானவர் என்பதோடு, உயர் நீதிமன்றத்தின் ஓய்வு பெற்ற நீதிபதிகள் மற்றும் தலைமை நீதிபதிதான் லோகயுக்தாவிற்கு நியமிக்கப்படுவதற்கான பொருத்தமான நபர்கள் ?ன்பதோடு, தனக்குப் பொருத்தமான பதவிக்குப் பொருத்தமான நபரை கணிப்பதற்கான சரியா? நபர் என்பதுதான் அவருடைய கருத்துக்கு அதிக முக்கியத்துவம் அளிப்பதன் நோக்கம் என்று கூறப்பட்டுள்ளது. இந்த விஷயத்தில் தலைமை நீதிபதிதான் முக்கியத்துவம் வாய்ந்தவர் என்பதால், அவருடைய பரிந்துரையை முதலமைச்சர் ஏற்றுக் கொள்ளாதது அர்த்தமற்றது என்று கூறியுள்ளது ………… மேலும் இதில், வரையறுக்கப்பட்ட அதிகாரங்கள் உள்ள நபர், (முதலமைச்சர்!) வரம்பற்ற அதிகாரத்தைப் பயன்படுத்த அனுமதி அளிக்கப்பட மாட்டாது என்றும் கூறப்பட்டுள்ளது.

முரண்பாடு

ஒன்பதே நாட்கள் இடைவெளியில் உச்ச நீதிமன்றம் லோகயுக்தா மற்றும் ?? லோகயுக்தா நியமனங்களைப் பற்றிய கருத்துகளில் இரண்டு வெவ்வேறு விதமான முரண்பட்ட கருத்துகளைக் கூறியுள்ளது. குஜராத் மாநிலத்தின் சட்ட வேறு மாநில சட்டத்துடன் எவ்வாறு முரண்பட்டதாக இருக்கும்? அதன் பிறகு வெளியிடப்பட்ட தீர்பில் அளிக்கப்பட்டுள்ள தீர்ப்புக்கான விளக்கத்தில், இந்த இரண்டு வழக்குகளின் பிரிவுகள் வெவ்வேறானவை என்று காரணம் கூறப்பட்டுள்ளது. ஆனால், இரண்டு சட்டங்களுமே உயர் நீதிமன்றத்தின் நீதிபதி உட்பட பல்வேறு ஆலோசிக்கப்பட வேண்டியவர்களை கலந்தாலோசித்த பிறகு முதலமைச்சர் பரிந்துரைக்க வேண்டும் என்று இரண்டு சட்டங்களிலும் தெளிவாக குறிப்பிடப்பட்டுள்ளது. நீதி மன்றம் கூறியதற்கு முரணாக, இந்த இரண்டு வழக்குகளுமே ஏறக்குறைய ஒரே சட்டத்தின் கீழ்தான் வருகின்றன.

சட்டமன்ற உறுப்பினர் என்ற முறையில் முற்றிலும் மாறுபட்ட இந்த கருத்துகள் என்னை சந்தேகத்தில் ஆழ்த்துகின்றன. எதிர்காலத்தில், பாராளுமன்றம் ?? அதிகாரம் கொண்ட கமிட்டிக்கு லோக்பால் நியமனத்திற்கான அதிகாரம் வழங்கினால், தலைமை நீதிபதி வெறும் ஆலோசிக்கப்பட வேண்டியவர் மற்றும் ஒரு பங்கேற்பாளர் என்ற நிலையில் இருப்பாரா அல்லது இந்தக் கமிட்டியில் உள்? மற்ற உறுப்பினர்களின் கருத்துகளைவிட இவரது கருத்துக்கு அதிக

முக்கியத்துவம் அளிக்கப்படுமா? இந்த தெளிவற்ற நிலை நீக்கப்பட வேண்டும். இதற்கான தெளிவான விளக்கம் வழங்கப்பட வேண்டும்.

ஒரு வார்த்தைக்கு, அதுவும் ஒரே மாதிரியான சந்தர்ப்பத்தில் வெவ்வேறு மாறுபட்ட அர்த்தம் அளிக்கப்பட்டதாக இதுவரை வரலாறு கிடையாது. இரண்டாம் உலக போர் தடுப்பு காவல் வழக்கின் போது, அமைதி காலத்தில் அளிக்கப்படுவதற்கு முற்றிலும் மாறான ஒரு விளக்கம், பெரும்பான்மையானவர்கள் இடம்பெற்றிருந்த பிரபுக்கள் மன்றத்தில் செயலாளரைத் திருப்தி படுத்த வேண்டும் ?ன்ற நோக்கத்தில் நாஜி ஒற்றர்களை காவலில் வைத்திருக்க வேண்டும் என்று அளிக்கப்பட்டது. லிவர்சிட்ஜ் அட்கின் பிரபு எதிர் ஜான் ஆண்டர்சன் வழக்கு நடைபெற்றது, இதுதான் சட்ட வரலாற்றிலேயே மிகப் பெரிய எதிர்ப்பை எதிர்கொண்டது. அவர் கூறிய வார்த்தைகளை நான் அப்படியே உங்களுக்குக் கூறுகிறேன் – "இந்த நாட்டில் ஆயுத மோதல்களின் மத்தியிலும் சட்டம் அமைதியாக இல்லை. அவை மாற்றப்படலாம், ஆனால், அவை போர்க்காலங்களிலும் அமைதி காலங்களிலும் ஒரே மாதிரியாகத்தான் இருக்கும். ….. இவ்வளவு எதிர்ப்பாளர்கள் மத்தியில் நான் தனியாளாக இருந்தாலும், நான் ?தை எதிர்க்கிறேன். அமைச்சருக்கு சிறை தண்டனை அடைக்கப்பட வேண்டும் என்ற கட்டுப்பாடற்ற அதிகாரம் இந்த வார்த்தைகளுக்கு இருப்பதாக பொருள் கொள்ளப்பட்டிருக்கிறது. இதற்கு ஒரே ஒரு அர்த்தம்தான் இருக்க முடியும். பொதுவான சட்டம் அறிக்கைகள் மற்றும் சட்ட விதிகளில் இவை பயன்படுத்தப்பட்டன; இவை ஒருபோதும், இதைப் போல இந்த வார்த்தைகள் முன்னெப்போதும் குற்றம் சுமத்தப்படுவதற்காகப் பயன்படுத்தப்பட்டதில்லை; இவற்றின் இயல்பான அர்த்தத்தில் பாதுகாப்பு விதிமுறைகளுக்காகப் பயன்படுத்தப்பட்டன; அவற்றுக்கான அர்த்தமாக தற்போது கூறப்பட்டுள்ள முறையில் வெளிப்படுத்தப்படும்போது, அர்த்தமற்றதாகிவிடுகிறது, பாதுகாப்பு விதிமுறைகவில் பொதுவாக பொருத்தமான சாரமற்ற வார்த்தைகள் பயன்படுத்தப்படுகின்றன, குறிப்பாக இந்த விதிமுறையில். அது பொருத்தமானதாக இருந்தாலும், - இந்த சந்தர்ப்பத்தில் பொருத்தமாக இல்லை - இயல்பிற்கு மாறா? நடந்துகொள்ள வேண்டிய அவசியம் ஏற்படும்படியாக இதில் எந்தவிதமான அர்த்தமற்ற தன்மையோ அல்லது பொதுவான குயுக்தியோ இல்லை. தற்போது பரிந்துரைக்கப்பட்டுள்ள தீர்ப்பை நியாயப்படுத்தக் கூடிய ஒரே ஒரு அதிகாரம்தான் எனக்குத் தெரியும். "நான் 'ஹம்ப்டி டம்ட்டி" என்ற வார்தையை ?? னமான குரலில் பயன்படுத்தும்போது, "அதிகமும் இல்லை, குறைவும் இல்லை" என்ற அர்த்தத்தில் நான் கூறுகிறேன் என்று பொருள் கொள்வலாம். "ஒரே வார்த்தையை ?? அர்த்தங்களில் எடுத்துக்கொள்ள முடியுமா,"என்பதுதான் கேள்வி. என்று ஆலிஸ் கூறினார். 'ஹம்டி டம்ப்டி, "இது தெரிந்துகொள்ளப்பட வேண்டிய ஒன்று" என்று கூறியது. – "அவ்வளவுதான்".

‘கலந்தாய்வு’ என்ற வார்த்தைக்கு ஒரே ஒரு அர்த்தம்தான் இருக்க முடியும். அது குஜராத்தோ அல்லது கர்நாடகாவோ நாட்டின் வேறு எந்தப் பகுதியாக இருந்தாலும் சரி.